1972 மார்ச் 14]

தேவைகளுக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி வருவதற்குள்ளாக, அதை எதிர்பார்த்தே அந்த நெடுஞ்சாலையை வெட்டி, பைப்புகள் போட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதுவும் ஆராயப்பட வேண்டிய ஒரு நல்ல யோசனை.

திரு. என். மருதாசலம் : குடி நீர்த் திட்டத்தில் கோவை சிறுவாணித் திட்டம் குறித்துப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது என்று, கேட்ட போதெல்லாம் அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். எப்பொழுது பேச்சுவார்த்தை முடியும். எப்பொழுது அது நடைபெறும் என்று முதலமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேரளாவைப்பற்றி அடிக்கடி இந்த மன்றத்தில் பேசுகிற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கட்சியினரே சேர்ந்து இதற்கான முயற்சிகளை மேற்கொண்டால் நலமாக இருக்கும்.

THIRU B. VENKATASWAMY : Water is most important for everybody's day-to-day life. May I know from the Hon. Minister why the Central Government is delaying on such a vital matter like protected water-supply?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தக் கேள்வியைத்தான் நாங்களும் எங்களுக்குள்ளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

* 474. வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை நகரின் குடிநீர் திட்டத்தை விஸ்தரிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வாகாப் : இராணிப்பேட்டை நகராட்சியிலிருந்து எல்.ஐ.சி. மூலமாகவோ அல்லது அரசாங்கத்திலிருந்தோ இந்த விஸ்தரிப்புத் திட்டத்திற்காக ஒரு லட்ச ரூபாய் கடனைக் கேட்டு மனுச் செய்திருக்கிறார்கள். அதை அரசு பரிசிலனை செய்து சாங்ஷன் செய்யுமா ?

[1972 மார்ச் 14

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இராணிப்பேட்டை நகராட்சியில் விட்டுவிடப்பட்ட சில தெருக்களில் ஒரு லட்ச ரூபாய் செலவில் பங்கீட்டு மூலக் குழாய் அமைத்து நீர்ப் பங்கீட்டு அமைப்பை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு, தமிழ்நாடு குடி நீர் வாரியத்தின் தலைமைப் பொறியாளருடைய பரிசீலனையில் உள்ளது. இவைகளெல்லாம் ஆய்வு செய்யப்பட்ட பிறகுதான் கேட்டிருக்கிற தொகையைப்பற்றி ஒரு முடிவுக்கு வர முடியும்.

திரு. நா. வீராசாமி: இராணிப்பேட்டை, ஆர்க்காடு ஆகிய இரண்டு நகரங் களும் இணைந்த குடிநீர்த் திட்டத்தின் கீழ் வருவதால், இராணிப்பேட்டை கீழ்ப் பகுதியாகவும், ஆர்க்காடு மேல் பகுதியாகவும் இருப்பதன் காரணமாக ஆற்காட் டில் தண்ணீரே வருவதில்லை. இதை உத்தேசித்துத்தான் இராணிப்பேட்டைக் குத் தனித் திட்டமும், ஆர்க்காட்டுக்குத் தனித் திட்டமும் உருவாக்கி, ஆர்க்காடு நகர மன்றத்தைப் பணம் கட்ட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக் கிறது. அதை உடனடியாக அமல் நடத்த அரசாங்கம் முற்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆர்க்காடு நக ராட்சிக் கென்று குடிநீர் வழங்கு திட்டமொன்றைத் தனிப்பட்ட ஆய்வுப்பணி கள் எல்லாம் நடத்துவதற்கு 3—2—1971-இல் அரசு அனுமதி வழங்கியுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல், இந்தத் திட்டம் நிறைவேற்றப் பட்டால் ஆர்க்காடு, இராணிப்பேட்டை ஆகிய இரு நகரங்களின் தண்ணீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்ற, படிப்படியான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

* 475 வினா—**திரு. க. சுப்பு:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விருதுநகரில் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் மேற் கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விருதுநகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்றுக்கு 1959-ஆம் ஆண்டில் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இது ஒரு மேம்பாட்டுத் திட்டமாகும். 1991-ஆம் ஆண்டில் மொத்தம் 80,000 மக்களுக்கு நபர் ஒன்றுக்கு 15 காலன் குடிநீர் வழங்குவதற்கு ஏற்றவாறு இத் திட்டம் வடிவ மைக்கப்பட்டுள்ளது. இது இன்னும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. எனினும், இத் திட்டத்தில் இதுவரை முடிவடைந்துள்ள பணிகளைக் கொண்டு நகருக்குக் குறிப்பிட்ட அளவு நீர் வழங்கப்பட்டுள்ளது. விருதுநகரின் குடிநீர்ப்பற்றாக் குறை கடுமையாக இருப்பது அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டதை முன்னிட்டு ரூ. 1.80 லட்சம் செலவு மதிப்பீட்டில் சங்கரலிங்கபுரம் அருகே கற்கள் வெட்டி எடுக்கப்படும் இடத்திலிருந்து தற்காலிகமாக நீர் எடுக்கும்